


# புதிய தலைமுறையின் கனவுக் கண்ணாடி

ஜீனியர் விகடன் இதழுக்கு ஆரம்பம் முதல் இன்று வரை பங்களித்து வரும் ஞாநியின் பார்வையில்……

ஜீனியர் விகடன் **1983**ல் தொடங்கப்பட்டபோது, நான் முழு நேரப் பத்திரிகையாளனாகி ஏழு ஆண்டுகள் ஆகியிருந்தன. ஆங்கிலப் பத்திரிகையாளனாக, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டின் மூலம் நான் இந்தத் துறையில் நுழைந்த **1975**-ம் ஆண்டு இந்தியப் பத்திரிகை உலக வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டு. சுதந்திர இந்தியாவில் முதன்முறையாக அப்போதுதான் பத்திரிகைகளுக்கு எதிரான ஒடுக்குமுறையும் முன் தணிக்கையும் நிகழ்ந்தன. **19** மாத நெருக்கடி நிலை முடிந்து தேர்தலில் ஆட்சி மாற்றம் நடந்ததும், பத்திரிகை உலகத்தின் பொற்காலம் தொடங்கியது என்றே சொல்லலாம். **90-** களில் சேட்டிலைட் சேனல்கள் வரும்வரை சுமார் **13** ஆண்டு காலம் இந்தப் பொற்காலம் நீடித்தது.

ஆங்கிலத்தில் செய்தி இதழ்கள் வாரப்பத்திரிகைகளாக வந்து கலக்கிக் கொண்டிருந்தன. ஆங்கிலப்பத்திரிகைகள் இந்திய மொழிப்பத்திரிகைகளை விட விலை அதிகமாக இருப்பதே வழக்கம். ஆனால், 'ஒரு ரூபாய் விலையில் ஆங்கில வார இதழா!' என்று வியக்க வைக்கும் விதத்தில் வெளியான 'சண்டே' அடைந்த வெற்றி, ஊடக உலகையே குலுக்கிப் போட்டது. ஒரு வாரம் அட்டையில் சண்டே என்ற பத்திரிகையின் பெயரையே மறைத்து படம் வெளியிடும் அளவுக்கு அந்த வெற்றி அவர்களுக்கு தன்னம்பிக்கையை அளித்தது. இந்தியா டுடே, ஆன்லுக்கர், இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி, ப்ரோப், ஜேஎஸ் என்று பல ஆங்கிலப் பத்திரிகைகள் செய்தி, நாட்டு நடப்பு விமர்சன இதழ்களாக வெளி வந்து கொண்டிருந்தன.




ஆங்கிலத்தில் இத்தனை இதழ்கள். தமிழில்? எழுபதில் தொடங்கிய துக்ளக் ஒன்று தான் இருந்தது. அதுவும் அரசியல் விமர்சகர் சோவின் கருத்துக்களமாக இருந்ததே தவிர, பலரும் பங்கேற்கும் விரிவான செய்தி இதழாக வடிவமைக்கப்படவில்லை. துக்ளக்கில் புலனாய்வு இதழாளராகப் பணியாற்றிய அனந்த், விசிட்டர், விசிட்டர் லென்ஸ் என்று அடுத்தடுத்து இரு முயற்சிகளை மேற்கொண்டார். பிறகு நானும் **1982**-ல்

தீம்தரிகிட இதழைத் தொடங்கினேன் என்று எழுதி முடிப்பதற்குள் இதழ் நின்று விட்டது. இவையெல்லாம் இயற்கையில் வாசகர் ஆதரவைப் பெற்ற போதும், நிர்வாகக் கோளாறுகள், பொருளாதார பலமின்மை முதலிய காரணங்களால் தோற்றன.

இந்தச் சூழலில்தான் 'ஜூனியர் விகடன்' இதழை விகடன் நிறுவனம் தொடங்கியது. முதல் இதழைப் பார்த்ததுமே, உற்சாகமடைந்து, ஏற்கெனவே ஆனந்த விகடனில் சிறுகதைகள் எழுதிய தொடர்பு இருந்ததால், ஜூ.வி-யில் வேலை கேட்டு ஆசிரியருக்கு விண்ணப்பம் அனுப்பினேன். தற்போது முழுநேர வேலை காலி இல்லையென்றும், நான் விரும்பினால் பகுதி நேரப் பணியாளனாக வரலாமென்று சொன்னார். அப்படி ஆரம்பித்து, தொடர்ந்து 25 வருடங்களாக விகடன் குழுமத்தில் பகுதி நேர வேலை, முழு நேர வேலை என்று மாறி மாறி நீடித்து வரும் உறவு இந்த மலரைத் தொகுப்பது வரை தொடர்கிறது. ஜூனியர் விகடனில் மறக்க முடியாத அனுபவங்கள் எனக்குப் பல இருந்தாலும் ஆரம்ப ஆண்டுகள் தொடர்பான இரு அனுபவங்களை மட்டும் இங்கே குறிக்கலாம்.

இந்த மலருக்காக 25 ஆண்டுகளின் ஆயிரக்கணக்கான இதழ்களின் அட்டைகளிலிருந்து சிலவற்றை தேர்ந்தெடுத்துத் தொகுக்கலாம் என்று சொன்னதும், நிறுவன ஆசிரியர் 1983 ஆகஸ்ட் மாத அட்டை ஒன்றைக் குறிப்பிட்டார். 'குத்திக் கொள்ள கொடி கொடுத்தீர்கள்; சட்டை தரவில்லையே' என்ற கவிதைக்கான படமாக, வெற்று மார்பில் ஒரு சிறுவன் ரத்தம் கசிய கொடி குத்தியது போன்ற படத்தை தாங்கிய அட்டை அது. இரவெல்லாம் அந்த அட்டையை வடிவமைத்து செய்து முடித்துவிட்டு நான் வீடு சென்ற போது, உடல்நலம் குன்றியிருந்த என் அம்மா மரணமடைந்தார். தேசத்தின் சோகத்துடன் சொந்த சோகமும் எனக்குக் கலந்து போன அட்டை அது.

இரண்டாவது மறக்க முடியாத நினைவு, ஆசிரியரின் அறிவுரை, இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டிலிருந்து என்னை வேலை நீக்கம் செய்ததை எதிர்த்து நான் தொடுத்திருந்த வழக்கில் நான்காண்டு போராட்டத்துக்குப் பின் நான் வென்று, மறுபடியும் அங்கே வேலைக்குச் சேரவேண்டிய நாளுக்கு முன் தினம் சரியாக ஜூனியர் விகடனில் என் ஆறு மாத கால ஒப்பந்தப் பணி முடிவடைந்திருந்தது. நான் மறுபடியும் ஆங்கில இதழியலுக்குச் செல்ல விரும்பவில்லை என்று ஜூனியர் விகடன் ஆசிரியரிடம் (நிறுவனர்) சொன்னேன். தமிழிலேயே தொடர விரும்புகிறேன் என்றேன். ஒரு கொள்கை அடிப்படையில் அந்த வழக்கில் நீங்கள் வென்றிருப்பதால் அதன் அடையாளமாக மறுபடியும் போய் வேலையில் சேருங்கள். எப்போது விரும்பினாலும் திரும்ப இங்கே வாருங்கள் என்று அறிவுரை சொன்னார். அப்படியே செய்தேன்.

நிருபராக, ஆசிரியர் குழு உறுப்பினராக, விமர்சகராக ஜூனியர் விகடனில் என் தனிப்பட்ட அனுபவங்கள் என்னை மிகவும் செழுமைப்படுத்தியவை. காய்கறி விலை உயர்வு அட்டைப்படத்துக்காக போஸ்டர் எழுதி திருவல்லிக்கேணி பெரிய தெருவில் போய் ஒட்டி படம் எடுத்தது முதல், கார்கில் போர் முனையில் ஜூ.வி-க்காக புகைப்படக்காரார் சு.குமரேசனுடன் செய்திகள் சேகரித்தது வரை விதவிதமான அனுபவங்கள், இதழாளனாக சுவையானவை.

ஜூனியர் விகடனில் பணியாற்றிய ஒவ்வொருவருக்கும், இது போலவும் இதை விடவும் சூடும் சுவையும் வலியும் வளமும் மிக்க அனுபவங்கள் நிறையவே உள்ளன. இவை வாய்க்கக் காரணமாக இருந்த அம்சங்கள் பல. கற்பனையாற்றல் மிகுந்த ஆசிரியர் குழு. அளவுக்கு மீறினாலும் செலவைப் பொருட்படுத்தாத நிர்வாகம். எதையும் செய்து பார்த்துவிடுவோம் என்று சவாலாக வாழ்க்கையை சந்திக்கும் வயதில் இருந்த இளைஞர் கூட்டம் தான் ஜூ.வி--யின் பலம்.

தனி நபர்கள் இருக்கட்டும். தமிழ்ச் சமூகத்துக்கு ஜூனியர் விகடன் அளித்திருப்பது என்ன? அதை ஆராய்வோம்.

இந்த மலர்த் தொகுப்புக்காக 25 வருட இதழ்கள் அனைத்தையும் பார்த்து முடித்தபோது, பெரும் பிரமிப்பே ஏற்படுகிறது. இந்த வருடங்கள் தமிழக, இந்திய, உலக அரசியல், கலாசார வரலாற்றிலும் முக்கியமானவை, ஆட்சி கவிழ்க்கப்பட்ட எம்.ஜி.ஆர், தேர்தலில் வீழ்ந்த இந்திரா காந்தி இருவரும் மறுபடியும் ஆட்சியைப் பிடித்த காலம் தொடங்கி, இன்றைய மன்மோகன்சிங் சோனியா காந்தி, கருணாநிதி ஆட்சிக்காலம் வரையிலான 25 வருடங்களில் என்னென்னவோ நடந்திருக்கின்றன.

சோஷலிசப் பொருளாதாரக் கொள்கை கைவிடப்பட்டு, உலகமயமாக்கலும், தாராளமயமாக்கலும், தனியார்மயமாக்கலும் வந்துவிட்டன. சோவியத் யூனியன் சிதறியது. அமெரிக்கா, உலகத்தின் ஒற்றை தாதா ஆகியிருக்கிறது. விழுவோம், எழுவோம் என்று மாறி மாறி ஜெயலலிதாவும், கருணாநிதியும் நிரூபித்துக் கொண்டே இருக்கிறார்கள். கூடவே வீழ்ச்சியே இல்லாமல் ஊழலும் அராஜகமும் எழுச்சியிலேயே இருக்கின்றன. வன்முறைக்கு இடமே இல்லாத காந்தி பூமி என்று கருதப்பட்ட இந்தியாவில் இந்திரா, ராஜீவ் என்று இரு பிரதமர்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள்.

1983-ல் ஜூனியர் விகடன் தொடங்கப்பட்டபோது தொடங்கிய ஈழப் போர். இன்னும் ஓரிரு வருடங்களில் முடிந்துவிடும், ஈழம் மலர்ந்துவிடும் என்று அப்போது கருதப்பட்டடது. ஆனால் ஆயிரக்கணக்கான உயிர்ச்சேதத்துடன் அது இன்னும் வெள்ளி விழா சோகமாகத் தொடர்கிறது. 1983ல் எய்ட்ஸ் என்ற சொல் இல்லை. இன்று அதில் உலக அளவில் தமிழகத்துக்கு முதலிடம். கூடவே அரசியலில் கற்புக் காவலர்களின் எண்ணிக்கையும் கூடியிருக்கிறது.

கடந்த 25 ஆண்டுகளில் மக்களை ஏமாற்றிப் பின்னர் அம்பலமான அரசியல்வாதிகள் எண்ணிக்கையைவிட, சாமியார்கள் எண்ணிக்கையே அதிகம். அதே போல தமிழ் சினிமாவின் புதுமுகங்களின் எண்ணிக்கையை விட தெருக்களில் தர்பார் நடத்தும் தாதாக்கள் எண்ணிக்கையே அதிகம்.

1983ல் ஒவ்வொரு டிரங்க் கால் பேசினாலும், அதை எழுதிப் பதிவு செய்ய ஒரு ரிஜிஸ்டர் போட்டாக வேண்டிய நிலையில் இருந்த ஜூனியர் விகடன் அலுவலகத்தில் இன்று கையில் செல்போன் இல்லாத நபரே இல்லை. 1983ல் காவல் நிலையத்தில் பாலியல் வன்முறையும், சித்ரவதைக் கொலைகளும் நடந்தது போலவே இன்றும் நடப்பதில் மாற்றம் இல்லைதான். ஆனால் அன்று கேட்க ஆளில்லாத நிலை இருந்தது, இன்று மாறியிருக்கிறது. அன்று மனித

உரிமை ஆணையமே இல்லை. இன்று ஒவ்வொரு இதழும் மனித உரிமைக் கேடயமாகியிருக்கிறது.

இத்தனை மாற்றங்களையும் ஜூனியர் விகடன் பதிவு செய்திருக்கிறது. பதிவு செய்தது மட்டுமல்ல. இவையெல்லாம் மக்கள் கவனத்துக்குரிய செய்திகள், இவற்றின் பின்னணி மக்கள் ஆராய்ச்சிக்குரியவை என்று தமிழ் இதழியலுக்கே ஒரு புதியத் தடத்தை அடையாளம் காட்டிய முன்னோடியாக விளங்கியிருக்கிறது. 1975ல் ஆங்கில இதழியலில் செய்தி விமர்சனப் பத்திரிகைகள் பல்கிப் பெருக முன்னோடியாக சண்டே இருந்ததைப்போல, எண்பதுகளில் தமிழ் இதழியலுக்கு முன்னோடியாக ஜூனியர் விகடன் அமைந்திருக்கிறது.

சண்டேவை விடக் கூடுதல் சிறப்பு ஜூனியர் விகடனுக்கு உண்டு. பெரும் பத்திரிகை நிறுவனம் நடத்தியபோதும் சண்டே வார இதழாகவே 20 ஆண்டுகளைக் கடக்க முடியாமல் நின்றுவிட்டது. ஜூனியர் விகடன் வாரம் இருமுறை இதழாக மாறியது. வெள்ளி விழாவை உற்சாகமாக சந்தித்துக் கொண்டு இருக்கிறது. மூன்றாவது தலைமுறை! வாசகர்களையும் ஈர்க்கும் பலத்தோடு விளங்குகிறது. ஜூனியர் விகடனைப் பின்பற்றி வந்துவிட்ட பல ஏடுகள், ஜூ.வி, அலசும் ஆராயும் அன்றாடச் செய்திகளை தாங்களும் அலசவும் ஆராயவும் செய்யலாம். ஆனால் ஜூ.வியின் சிறப்பு, தனித்தன்மை என்ன?

என் பார்வையில் ஜூனியர் விகடனில் 25 வருடங்களில் வந்திருக்கக்கூடிய நூற்றுக்கு மேற்பட்ட தொடர்களே தனித்தன்மை வாய்ந்தவை. அணுசக்தி கதிரியக்க ஆபத்துக்கள், எய்ட்ஸ் நோய் சிகிச்சை, மருத்துவத் தொழிலின் ஊழல்கள், கல்வித்துறை, போலீஸ் துறை, தீவிரவாதம், கவிதை, செக்ஸ், கிராமியக் கலாசாரம், ஈழப் போராளிகளின் அனுபவங்கள், தமிழ்ச் சமூகத்தை மாற்றியமைத்த மனிதர்கள் என்று விதவிதமான துறைகள் பற்றிய இந்தத் தொடர்கள் ஒவ்வொன்றும் தமிழுக்குப் புதியவை. தமிழ்ச் சமூகத்தின் புதிய தேவையை சந்தித்தவை. இதுதான் ஜூனியர் விகடனின் தனித்தன்மை.

'ஆனந்த விகடன்' தொடங்கப்பட்ட 1930 களின் தமிழகம் வேறு. விடுதலை உணர்ச்சிப் பெருக்கமும் கல்வி வளர்ச்சித் தேக்கமும் நிரம்பிய ஆண்டுகள் அவை. எண்பதுகளின் தமிழகம் வேறு. ஐம்பது, அறுபதுகளில் காமராஜர் தொடங்கிவைத்த கல்விப் புரட்சியில் பயனடைந்த முதல் தலைமுறைகள் எழுபதுகளின் இறுதியில்தான் வாசகர்களாக இதழ்களைத் தேடி வந்தார்கள். இந்த புதிய வாசகர்கள் சாதி, மத வரையறைகளுக்கு அப்பாற்பட்ட பெரும் எண்ணிக்கையினர். இவர்களின் தேவை ஒரு புது தமிழகம். இவர்களின் கனவு ஒரு புது தமிழகம். ஆனால் அந்தக் கனவு ஏன் மெய்ப்பட மறுக்கிறது என்பதே இவர்களின் கவலை. கனவுத் தமிழகத்துக்குத் தடையாக இருக்கும் அரசியல், கலாசார சக்திகள் எவை? கல்வி வளர்ச்சியுடனே அடிமை உணர்ச்சியும் பெருகுவதற்கு யார் பொறுப்பு?

இதையெல்லாம் அடையாளம் காட்ட வேண்டிய கடமை இதழியலுக்கு உரியது. அந்தத் தேவையைத்தான் ஜூனியர் விகடன் நிரப்ப முயற்சிக்கிறது. தேவையும் தொடர்கிறது. எனவே ஜூ.வி--யின் பணியும் மேலும் முனைப்புடன் தொடரவேண்டும். இந்தப் பயணத்தில் வெள்ளி

விழா என்பது இளைப்பாறும் நேரமும் அல்ல. களைப்பாறும் நேரமும் அல்ல, தொடர்ந்த பயணத்துக்கான புதிய எரிபொருள் நிரப்பும் நேரம்..!

- ஞாநி ஜீனியர் விகடன்
**7.3.2007**